# தமிழ் இணையக் கல்விக்கழகம்
# சென்னை – 600 025.

## இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)
## இரண்டாம் ஆண்டு – நான்காம் பருவம்

## ஜனவரி – பிப்ரவரி 2026
## A041 இலக்கிய வரலாறு

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

### பிரிவு – 1

**ஒரு சொல் / ஒரு தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. ஆரிய அரசனுக்குத் தமிழ் அறிவிக்கப் பாடப்பட்ட நூல் எது?
2. வடமொழியிலிருந்து மொழிபெயர்த்ததாகக் கருதப்படும் அற நூல் எது?
3. மணிமேகலைக்குப் பழம்பிறப்பு உணர்த்தப்பட்ட இடம் எது?
4. முதல் மூன்று ஆழ்வார்களும் சந்தித்த இடம் எது?
5. பெருந்தமிழன் என்று தன்னை அழைத்துக் கொண்ட ஆழ்வார் யார்?
6. மத்தவிலாசப் பிரகசனம் என்ற நாடக நூலின் ஆசிரியர் யார்?
7. காஞ்சிக்கு வந்த சீனப்பயணி யார்?
8. எட்டம் நூற்றாண்டில் தோன்றிய சமண நூல்கள் யாவை?
9. மணிக்க வாசகர் இயற்றிய நூல்கள் யாவை?
10. விருத்தப்பாவில் அமைந்த முதல் காப்பியம் எது?
11. சமணப்பாவை நூல் எது?
12. மெய்க் கீர்த்தி என்றால் என்ன?
13. கனாநூல் எதைப் பற்றிக் கூறுகிறது?
14. காலத்தால் பழமையான உலா நூல் எது?
15. குட்டித் தொல்காப்பியம் என்பது எது?

**பிரிவு – 2**

**எவையேனும் <u>ஐந்து</u> வினாக்களுக்கு <u>ஒரு பத்தி அளவில்</u> விடை தருக. (5x3=15)**

16. பத்துப்பாட்டில் ஆற்றுப்படை நூல்கள் பற்றி விளக்குக.
17. சமண இலக்கியம் இரண்டனை அறிமுகப்படுத்துக.
18. சுந்தரரின் திருத் தொண்டத்தொகை பற்றி விளக்குக.
19. ஆண்டாள் அருளியவை பற்றிக் குறிப்பிடுக.
20. திருவாசகத்தின் சிறப்புகளை எடுத்துரைக்க.
21. நிகண்டு நூல்கள் பற்றி எழுதுக.
22. பரிமேலழகரின் உரைச் சிறப்பினைக் கூறுக.
23. சிவவாக்கியர் பாடல்களின் தன்மையை விளக்குக.

**பிரிவு – 3**

**<u>மூன்று பக்கக் கட்டுரை வடிவில்</u> விடை தருக. (3x15=45)**

24. (அ) எட்டுத்தொகை நூல்களில் அக நூல்களை விளக்குக.

(அல்லது)

(ஆ) பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் அற நூல்கள் பற்றி எழுதுக.

25. (அ) பன்னிரு திருமுறைகள் குறித்துக் கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) வைணவ இலக்கியங்கள் குறித்துக் கட்டுரை எழுதுக.

26. (அ) சித்தர் பாடல்கள் கூறும் பொதுமைச் சிந்தனையைத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

(ஆ) இஸ்லாமிய, கிறித்துவ இலக்கியங்கள் குறித்துக் கட்டுரைக்க.

❋❋❋